<u>செய்தி வெளியீட்டு எண்:</u> **70/2016** <u>நாள்:</u> **08.05.2016**

## <u>செய்தி குறிப்பு</u>

திருவண்ணாமலை மாவட்டத்திற்கு 16.05.2016 திங்கட்கிழமை அன்று நடைபெறவுள்ள, சட்டமன்றத் தேர்தலில் முன்னாள் படைவீரர்களை சிறப்பு காவலர்களாக அரசு ஈடுபடுத்தப்பட உள்ளது. எனவே, முன்னாள் படைவீரர்கள் அனைவரும் இதனை ஓர் நாட்டுப் பொதுநல தொண்டாகக் கருதி கலந்து கொள்ளுதல் வேண்டுமென்றும் மற்றும் தேர்தல் பாதுகாப்புப் பணிக்குச் செல்ல விருப்பம் தெரிவித்த / தெரிவிக்காத முன்னாள் படைவீரர்கள் மற்றும் <u>டெக்ஸ்கோவில் பணிபுரியும் முன்னாள் படைவீரர்கள் (இத்தேர்தல் பணி **ON DUTY** ஆக கருதப்படும்)</u> உடனடியாக தங்களது அசல் படைவிலகல் சான்று, அடையாள அட்டை மற்றும் வாக்காளர் அட்டையுடன் 14.05.2016 சனிக்கிழமை அன்று காலை 08.00 மணிக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாகத்தின் அருகில் உள்ள மாவட்ட விளையாட்டு மைதானத்தில் ஆஜராகுமாறு திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தனது செய்திக் குறிப்பில் கேட்டுக்கொண்டுள்ளார்.

<u>முன்னாள் படைவீரர்களின் வேண்டுகோளுக்கிணங்க, உணவுப்படி உயர்த்தி வழங்கப்படவுள்ளது.</u> மேலும் விவரங்களுக்கு, திருவண்ணாமலை மாவட்ட முன்னாள் படைவீரர் நல உதவி இயக்குநர் அவர்களை அணுகுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

<u>செய்தி வெளியீடு:</u>

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
திருவண்ணாமலை.